# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2004 - 2017 ජනවාරි මස 27 වැනි සිකුරාදා - 2017.01.27

*2004 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப் பட்டியல் | 28 |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 28 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**- கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்டல் சட்டமூலம் 2017, சனவரி மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2017, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல்

## அறிவித்தல்

## (107 ஆவது அத்தியாயமான) நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்

கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் நொத்தாரிசு கடமையில் கடமையாற்றும் திருமதி சொனாலி கோதமி ராஜபக்ச அவர்களுக்கு சிங்கள மொழியில் பதவியில் கடமையாற்றுவதற்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் 2016.06.17 ஆந் திகதி தொடக்கம் இரத்துச் செய்யப்படுவதற்கு கௌரவ உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கின்றேன்.

நீல் டி அல்விஸ்,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு 7,
2016, திசெம்பர் 07.

1-725

# நானாவித அறிவித்தல்கள்

### மேல்மாகாண மேல் நீதி மன்றம் (கொழும்பில் அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்)

கொழும்பு 13, பிக்கரிங்ஸ் வீதி, 144 ஆம் இலக்கத்தையுடைய வெலிசர, கொழும்பு வீதி, 309/3 ஆம் இலக்கத்திலுள்ள வெலிசரக் கைத்தொழில் கட்டிடத்தொகுதியையும் சேர்ந்த எக்ஸ்போ பிரான்ட் பக்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட்டின் (பீவீ 85762) விடயத்தில்

அத்துடன்

ஒடுக்குதல்
விண்ணப்ப இல.:
மே.நீ.(குடியியல்)
70/2016/Co

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பாகத்தின் கீழ் நீதிமன்றத்தால் ஒடுக்கப்படுவதற்கான விண்ணப்பமொன்றின் விடயத்தில் ;

இலங்கை வர்த்தக வங்கி பீஎல்சீ, இல. 21, சேர் ராசீக் பரீட் மாவத்தை, கொழும்பு 01.

மனுதாரர்

கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று, கொழும்பு 1, சேர் ராசீக் பரீட் மாவத்தை, 21 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த இலங்கை வர்த்தக வங்கி பீஎல்சீ யினால் 2016, நவெம்பர் 25 ஆந் திகதியன்று சொல்லப்பட்ட நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்பட்டதென இத்தால் அறிவித்தல் கொடுக்கப் படுகின்றது என்பதுடன், சொல்லப்பட்ட மனு, 2017 , மாச்சு மாதம் 22 ஆந் திகதியன்று நீதிமன்றத்தின் முன்னர் கேட்கப்படுவதற்குப் பணிக்கப்படுகின்றது. சொல்லப்பட்ட மனுமீது கட்டளையொன்று ஆக்கப்படுவதனை ஆதரிப்பதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்புகின்ற சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன் கொடுநர் அல்லது உதவுதொகை செலுத்துனர் சொல்லப்பட்ட நோக்கத்திற்காக நேரடியாகவோ அல்லது அவரது வழக்குரைஞர் மூலமாகவோ அல்லது அவரது பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிகள் மூலமாகவோ கேட்பு நேரத்தில் தோன்றலாம். அத்துடன் மனுவின் பிரதியொன்று அதனைத் தேவைப்படுத்தும் சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன்கொடுநருக்கு அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு அதற்காக விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின் மீது கீழே கையொப்பமிட்டவரினால் கொடுத்துதவப்படும்.

ஜுலியஸ் அன்ட் கிறீசி,
மனுதாரருக்கான சட்டத்தரணிகள் ,
இல.41, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 1.

**குறிப்பு**.- சொல்லப்பட்ட மனுவின் கேட்பின்போது தோன்றுவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள், அவ்வாறு செய்வதற்கான அவரது உட்கருத்துக்கள் பற்றிய எழுத்தினாலான அறிவித்தலை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிகளான சொல்லப்பட்ட திருவாளர்கள் ஜுலியஸ் அன்ட் கிறீசி என்போருக்குச் சேர்ப்பித்தல் வேண்டும். அல்லது அஞ்சலின் மூலம் அனுப்புதல் வேண்டும். அறிவித்தலானது, ஆளின் பெயரையும் முகவரியையும் அல்லது குழுமமொன்றாயின் குழுமத்தின் பெயரையும் முகவரியையும் கூறுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாளினால் அல்லது அக்குழுமத்தினால் அல்லது அவரது அல்லது அவர்களது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணிகளால் ( எவரேனுமிருப்பின்) கையொப்பமிடுதலும் வேண்டும். அத்துடன் மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரை 2017, மாச்சு 21 ஆம் நாளன்று பிற்பகல் 6.00 மணிக்குப் பிந்தாமல் சென்றடையுமாறு அது சேர்ப்பிக்கப்பட வேண்டும் அல்லது அஞ்சலிலிடப்படின், அந்நேரத்திற்கு முன்னர் அவரைச் சென்றடையக்கூடிய வகையில் போதிய நேரகாலத்துடன் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

ஜுலியஸ் அன்ட் கிறீசி,
மனுதாரருக்கான சட்டத்தரணிகள் .

1-940

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.